**வரையறுக்கப்பட்ட கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி - 2022/ 2023**

-----------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின்

உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

(அ) மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 5,649,161 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 2,005,792 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இலாபத்தில் ரூபா 3,643,369 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) கம்பனியின் நிர்வாகச் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 847,344 அல்லது 87.15 சதவீதத்தால் அதிகரித்திருந்தன, அதேநேரம் நிதிச் செலவினமானது முன்னைய ஆண்டில் ரூபா 1,405,681 இலிருந்து ரூபா 1,764,593 வரை 25.53 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக, கம்பனியின் மொத்தலாபம் முன்னைய ஆண்டில் ரூபா 4,677,882 இலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 8,427,866 வரை ரூபா 3,749,984 ஆல் அல்லது 80.16 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 5,649,161 தேறியலாபம் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் மீதான சுயாதீன மதிப்பீட்டாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம், சேதமடைந்த, பழுதுபார்க்கப்பட வேண்டிய மற்றும் அழிப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துகளின் பெறுமதி 2023 மார்ச் 31 இல் ரூபா | பெரும்பாலான இயந்திரங்கள் தற்போது இயங்கும் நிலையில் உள்ளன மற்றும் மீதமுள்ள இயந்திரங்களை பழுதுபார்க்கும் செயல்முறை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. நாம் பழுதுபார்க்கும் செயல்முறையை விரைவில் முடிப்பதற்கு எதிர்பார்ப்பதுடன் அவை மீண்டும் | பழுதுபார்க்கப்பட்டு செயற்பாட்டிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 93,650,000 ஆக இருந்தது. இந்த நடைமுறையல்லாச் சொத்துகளை விற்கவோ அல்லது பழுதுபார்க்கவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும். | |
| (ஆ) | கம்பனிளால் வழங்கப்பட்ட தகவல்களின்படி, 2022/2023 மதிப்பீட்டு ஆண்டில் தமன பிரதேச சபைக்கு மதிப்பீட்டு வரியாக ரூபா 258,698 செலுத்தப்பட்டது. நிறுவனத்தின் ஊழியர்களுக்காக வழங்கப்பட வேண்டிய 233 உத்தியோகபூர்வ இல்லங்களில் 211 உத்தியோகபூர்வ இல்லங்கள் அங்கீகரிக்கப்படாத குடும்பங்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. கம்பனியால் குடியிருப்பாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை மற்றும் அவற்றை கையகப்படுததுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உள்ளூராட்சி மன்றத் தேவைகளுக்கு அமைவாக, பிரதேச சபையால் கணக்கிடப்பட்ட பங்குதாரர் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குடியிருப்புகள் மற்றும் ஏனைய கட்டிடங்கள் தொடர்பான வரிகள் செலுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், பங்குதாரர் ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவதற்கு முன்பே, சில காலாண்டுகளைத் தவிர பெரும்பாலானவை பொதுமக்களால் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும், இந்த காலாண்டுகள் உள்ளிட்ட மேட்டு நிலங்களுக்கான காணி குத்தகை ஒப்பந்தம் இது வரை கைச்சாத்திடப்படவில்லை. எனவே, நிறுவனத்தின் வழக்கறிஞரின் அறிவுறுத்தலின்படி, இந்த காலாண்டுகளுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். நிலக் குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன் கையொப்பமிட்டவுடன் இந்த காலாண்டுகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | இல்லங்களை கையகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், நில குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டியதுடன் , கையொப்பமிட்டவுடன் இந்த காலாண்டுகளுக்கு கம்பனியால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 06 ஒப்பந்ததாரர்கள் மற்றும் வழங்குநர் தொடர்பாக 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள ரூபா 35,191,312 தொகையை செலுததுவதற்கு அல்லது பதிவளிப்பதற்கு நிர்வாகத்தால் முடியாதருந்தது. அதிதுடன், பணம் செலுத்துவதில் தாமதத்திற்கான காரணங்கள் நிர்வாகத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு கம்பனிக்கு முறையான விலைப்பட்டியல்கள் கிடைக்கவில்லை. இருப்பினும், வழங்குநர்களால் அவர்களின் நிலுவைத் தொகை சமீபத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் இன்னும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆனால் தற்போது கம்பனி தொழிற்சாலை விரிவாக்க திட்டத்தால் சில பண நெருக்கடிகளை எதிர்கொள்கின்றதுடன் காசுப்பாய்ச்சல் முன்னேற்றமடைந்ததும் அதற்கேற்ப வழங்குநர்களின் விலைப்பட்டியல்கள் செலுத்தப்படும். | நிலுவையில் உள்ள நிலுவைகளை செலுத்த அல்லது தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையின்படி, விவசாயிகளிடமிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகை | கணக்காய்வாளரின் பார்வைக்காகத் தேவையான விவரங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் 2023 அக்டோபர் 31 இல் ரூபா 75.91 | விவசாயிகளிடமிருந்து பெற வேண்டிய நிலுவைக் கடன் |

| | | |
|---|---|---|
| ரூபா 75,912,550 இல் ரூபா 33,770,276 மற்றும் ரூபா 21,710,893 முறையே 03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ளன. மேலும், அந்த நிலுவைத் தொகைகள் குறித்த விவரங்களை கம்பனியால் வழங்க முடியாதிருந்தது. | மில்லியன் நிலுவைத் தொகையில் 10 மில்லியன் தொகையை கம்பனிக்கு அறவிடக்கூடியதாக இருந்தது. மேலும் கம்பனி நீண்டகால நிலுவைத் தொகைகள் மற்றும் தீர்க்கப்படாத நிலுவைகளை தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றது. மேற்படி நிலுவைத் தொகையில் அறவிடப்பட்ட விவரங்கள் உங்கள் எளிதான குறிப்புக்காக கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. | தொகை அறவிடப்படுவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 மே 09 ஆம் திகதிய விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட பெறுகை வழிகாட்டிக்கோவை மற்றும் அதனுடன் தொடர்புடைய பெறுகை கையேடு, கம்பனி 2018 செப்டம்பர் 05 இல் அதன் சொந்த பெறுகை வழிகாட்டிக்கோவையை உருவாக்கியிருந்ததுடன் , அதற்காக நம்பிக்கைப்பொறுப்பு குழுவின் அங்கீகாரத்தை உறுதிப்படுத்தும் ஆவணமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.<br><br>மேற்கூறிய அரசு பெறுகை வழிகாட்டிக்கோவை மற்றும் கையேட்டில் மின் பெறுகை அனுமதிக்கப்படாத போதிலும், பெறுகை மதிப்பு ரூபா 1,000,000 தொகையை மிகைக்கும்போது ஏலங்கள் அழைக்கப்பட்டு தபால் மூலம் பெறப்பட வேண்டும், அதற்கு முரணாக கம்பனி அவர்களின் வழிகாட்டிக்கோவையில் மின் பெறுகை உப பிரிவு 3.2 ஐ அனுமதித்துள்ளது.<br>மீளாய்வாண்டில் ரூபா 1,000,000 பெறுமதிக்கு மேற்பட்ட ரூபா 55,084,923 மதிப்புள்ள 10 பொருட்கள் மின் பெறுகை மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | இங்கு குறிப்பிடப்பட்ட பெறுகை வழிகாட்டிக்கோவை 2018 இல் உருவாக்கப்பட்டதுடன் அந்நேரத்தில் நடைமுறையில் உள்ள பொருட்களின் விலைகள் மற்றும் பொருளாதார நிலைமைகள் கருத்திற் கொள்ளப்பட்டிருந்தன.<br>எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கொவிட்-19 தொற்றுநோய் எதிர்பாராத சீர்குலைவை ஏற்படுத்தியிருந்ததுடன் இது நாடு தழுவிய பொருளாதார முடக்கம் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் விரைவான அதிகரிப்பு மற்றும் சந்தையில் பொருட்களின் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது.இதன் விளைவாக, பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தொற்றுநோய்களின் பிற விளைவுகள் காரணமாக அத்தியாவசிய பதிவு அஞ்சல் சேவை உட்பட அனைத்து சேவைகளும் தற்காலிகமாக முடக்கப்பட்டன.<br>மேறபடி சவால்களுக்கு மத்தியில் வழங்குநர்களிடமிருந்து பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் பெறுகைகளை மேற்கொள்வது சவாலான பணியொன்றாக மாறியது. இதன் விளைவாக, இந்த தடைகள் இருந்தபோதிலும் அதன் செயல்பாடுகளில் நிலைத்திருக்க நிறுவனத்தின் நிர்வாகம் உறுதியான முடிவை எடுத்தது. தொற்றுநோய் காலத்தில் தபால் திணைக்கள சேவை கிடைக்காத காரணத்தினால் சாத்தியமான மாற்றீடாக இலத்திரனியல் ஊடகங்களுக்கு மாறுவதற்கு நிர்வாகம் | அரசு பெறுகை வழிகாட்டிக்கோவை மற்றும் கையேட்டிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தீர்மானித்துள்ளது. பொருளாதாரச் சரிவு மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட ரூபாயின் மதிப்பு சரிவால், தேவையான காலக்கெடுவுக்குள் நிறுவனத்தின் தடையற்ற செயல்பாட்டிற்கு அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்தல் மிகவும் சவாலானது. அவசரத் தேவையை உணர்ந்து ரூபா 1 மில்லியன் வரம்பிற்குள் இலத்திரனியல் ஊடகத்தினூடாக விலைமனுக்களை பெற்றுக் கொள்வதற்கு நிர்வாகத்தினால் அனுமதி வழங்கப்படடிருந்தது. தற்போதைய பொருளாதாரம் மற்றும் விலைகளுக்கு ஏற்றவாறு கம்பனி தனது பெறுகை வழிகாட்டிக்கோவையை அண்மையில் புதுப்பித்துள்ளது. இந்த மாற்றங்களுக்கு பணிப்பாளர் குழு அங்கீகாரம் அளித்துள்ளது, தற்போதைய பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப பெறுகைகளை மேற்கொள்ள முடியும் என்பதை கம்பனி உறுதிப்படுத்துகின்றது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் சூரியசக்தி மின் உற்பத்தி மற்றும் கார்பன் டையோக்சைடு (CODS) உற்பத்தி மூலம் முறையே ரூபா 84,218,310 மற்றும் ரூபா 14,760,000 வருமானத்தை ஈட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் சூரியசக்தி மின் உற்பத்தி மூலம் ரூபா 7,796,655 மாத்திரம் ஈட்டப்பட்டிருந்ததுடன் கார்பன் டையோக்சைடு (CODS) உற்பத்தி மூலம் எந்த வருமானமும் உருவாக்கப்படவில்லை. | 2022 யூலையில் சூரியசக்தி செயற்திட்டத்தை முடித்து, 3,828,105 அலகுகள் சூரியசக்தி மின் உற்பத்தியை தேசிய கட்டமைப்பிற்கு ரூபா 22 இற்கு ஏற்றுமதி செய்து 2022-23 நிதியாண்டில் ரூபா 84,218,310 தொகையை ஈட்டுவதற்கு திட்டமிடப்படடிருந்தது. இருப்பினும், செயற்திட்டம் தொடங்கப்பட்டதும் பல சம்பவங்கள் இடம்பெற்றன , இதனால் திட்டத்தை அமுல்ப்படுத்துவதில தாமதம் ஏற்பட்டது. அவற்றில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, பல அரசாங்க கட்டுப்பாடுகள் LC திறப்பு மற்றும் LC/TT கொடுப்பனவுகளை கடுமையாக பாதித்தன. இதன் விளைவாக பெரும்பாலான இறக்குமதி பொருட்கள் உரிய நேரத்தில் தளத்திற்கு வரவில்லை. நாட்டில் எரிபொருள் கிடைப்பனவு பற்றாக்குறை காரணமாக பதவியணியினர் மற்றும் பொருட்களை சரியான நேரத்தில் கொண்டு செல்வது சவாலாக இருந்ததுடன் நிகழ்ச்சித்திட்ட | சூரிய மின் உற்பத்தி மற்றும் கார்பன் டை ஆக்சைடு உற்பத்தி (CODS) மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அமுல்ப்படுத்தலில் தாமதங்களை ஏற்படுத்தியது. எனவே, இச் செயற்திட்டம் தாமதமானதுடன் எதிர்வுகூறப்பட்டவாறு சூரியசக்தி மின்சாரத்தை தேசிய மின்சார கட்டமைப்பிற்கு ஏற்றுமதி செய்ய முடியவில்லை. இருப்பினும், செயற்திட்டம் 2022 நவம்பர் இறுதிக்குள் முடிக்கப்பட்டு, கட்டணத் திருத்தத்திற்குப் பிறகு 2022 திசெம்பர் 23 அன்று தொடங்கப்பட்டது. எனவே, இலங்கை மின்சார சபையுடன் (CEB) ரூபா 34.50 இற்கு சூரியசக்தியை தேசிய கட்டமைப்பிற்கு ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடிந்தது. கார்பன் டையோக்சைடு ஆலை நிறுவுதல் 2022 ஜூன் இல் தொடங்கப்பட்டது. இருப்பினும், ஆலை அமைக்கும் பணி 75% நிறைவடைந்துள்ளது. நிறுவுதல் 2024 ஜனவரி இறுதியில் முடிவடையும். | |
| (இ) | கம்பனி அனைத்து இருப்பு பெறுவனவு மற்றும் வழங்கல்களை நிர்வகிக்க ஒரு முறையான இருப்பு முகாமைத்துவ அமைப்பை பராமரிக்க வேண்டும் என்றாலும், தற்போது கம்பனியால் பயன்படுத்தப்படும் ERP அமைப்பு இருப்பு காலப் பகுப்பாய்வு அறிக்கைகளை உருவாக்கும் திறன் கொண்டதாக இல்லை. எனவே, காலாவதியான, மெதுவாக நகரும் மற்றும் நகராத பொருட்களை தனித்தனியாக அடையாளம் காண்பதற்கு முடியவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கம்பனி 2008 ஆம் ஆண்டு முதல் மேம்படுத்தப்படாத Sage Accpac கணக்கியல் முறையைப் பயன்படுத்துகிறது. தற்போதுள்ள அமைப்பு கம்பனியின் தேவையை பூர்த்தி செய்யவில்லை மற்றும் MIS தரவு மற்றும் அறிக்கைகளை வழங்க முடியவில்லை. சில MIS தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் நிர்வாக நோக்கத்திற்காக அறிக்கையைத் தயாரிப்பதற்கும் ஊழியர்கள் அதிக நேரத்தை வீணடித்து வருகின்றனர். தற்போது, நிறுவனம் ஒரு புதிய ERP அமைப்பை (SAP One) செயல்படுத்தத் தொடங்கியுள்ளது மற்றும் செயல்படுத்தல் நடந்து கொண்டிருக்கின்றது. | புதிய ERP முறையை அமுல்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 2.5 (அ) பிரகாரம் சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் (PPE) பயனுள்ள ஆயுட்காலத்தை நிர்வாகம் மீளாய்வு செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 16 - சொத்து, | கம்பனி முழுமையாகத் தேய்மானமிடப்பட்ட சொத்துக்கள் உட்பட ஒவ்வொரு சொத்தின் பயனுள்ள ஆயுட்காலத்தை மதிப்பிடுகிறது. ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கண்டறியப்பட்டால் LKAS 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள் என்பதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படும் மற்றும் வெளிப்படுத்தப்படும். | LKAS 16 மற்றும் LKAS 08 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பொறி மற்றும் உபகரணங்களின் 51 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் முழுமையாகத் தேய்மானமிடப்பட்ட அண்ணளவாக ரூபா 61.6 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் கம்பனியால் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. LKAS 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள் என்பதன் பிரகாரம் மதிப்பீட்டு பிழையை சரிசெய்தல் மற்றும் நிதிக்கூற்றுக்களில் சரியான கொண்டு செல்லும் பெறுமதியைக் காட்டுதல் என்பன செய்யப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறாயினும், கம்பனி ஆண்டுதோறும் இந்த முழுமையாகத் தேய்மானமிடப்பட்ட சொத்துக்களை பழுதுபார்ப்பதற்கும் பராமரிப்பதற்கும் கணிசமான தொகையை செலவிட்டுள்ளதுடன் அச்செலவுகள விரிவான வருமானக்கூற்றில் கட்டணமாகக் காட்டப்படுகின்றது.